ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# சங்க இலக்கிய முல்லைத்திணை மக்களின் மானுடவியல் பண்புகள்

**ஆய்வாளர்**
**க.கவிதா**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி*
*இராசிபுரம் 637 401.*

**நெறியாளர்**
**முனைவர் து.ரேணுகாதேவி**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி*
*இராசிபுரம் 637 401.*

**ஆய்வுச்சுருக்கம்**

*முல்லைநிலம் என்பது பண்டைய தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்துவகைத் தமிழர் திணைகளில் ஒன்றாகும். காடும், காடுசார்ந்த பகுதி முல்லை என்று அழைக்கப்படுகின்றது. செம்மண் பரந்திருத்தலால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப் பெயரிடப்பட்டது. முல்லைநில மக்களுக்குப் பல்வேறு வகையான பெயர்கள் காணப்பட்டன. பல்வேறு வகையான ஆடை அணிகலன்களையும் அணிந்திருந்தனர். ஆடு மாடு மேய்க்கும் தொழில் முல்லை நிலத்தவரின் முக்கிய தொழிலாகும். அவர்களின் திருமணமுறை மகிழ்ச்சியாகவும் கடவுள் வழிபாடுகள் சிறப்பாகவும் நடைபெறுகின்றன. முல்லை நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் காட்டைத் திருத்தி உழுது, பயிர்கள், வரகு, சாமை போன்றவைகளை விதைத்து அதில் வந்ததை உணவாகக்கொண்டு மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துள்ளனர்.*

**முன்னுரை**

*மனித சமுதாயம் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது. சங்ககாலம் கி.மு.1000 முதல் கி.மு.250 வரை என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். பண்டைய சமுதாயத்தில் வாழ்ந்த மக்களிடையே நற்சிந்தனைகளும் நல்ல பழக்கவழக்கங்களும்*

நிரம்பிக்கிடந்தன. முல்லைநில மக்கள் தமது புறவாழ்விலும் அகவாழ்விலும் சிறந்த குறிக்கோள்களை உடையவராக வாழ்ந்தனர். முல்லைநில மக்கள் விரிச்சிக்கேட்டல், நற்சொற் கேட்டல், வர்ணனைகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறார்கள். முல்லைநில மக்களின் வாழ்க்கைமுறை, கடவுள் வழிபாடு, முல்லை மலர், தொழில்கள், உணவுமுறை ஆகியவற்றைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் விளக்கமுறை மற்றும் பகுப்புமுறை என்னும் இரு ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இதில் மானுடவியல் பற்றி சுருக்கமாகவும் முல்லைநில மக்களின் மானுடவியல் பண்புகள் பற்றி விரிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

**மானுடவியல் பண்புகள்**

மானிடவியல் என்பது மனித இனத்தினைப் பற்றிய முழுமையான அறிவியல் ஆய்வு எனலாம். மனிதனைப் பற்றி முழுமையாக அறியவேண்டுமாயின் நான்கு பரிமாணங்களில் அறியவேண்டும் என மானுடவியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவை 1.கடந்த கால மனிதனை அறிவது, 2.நிகழ்கால மனிதனையும் வருங்கால மனிதனையும் அறிவது, மனிதனை உயிரியல்சார் நிலையில் அறிவது, 4.மனிதனைப் பண்பாட்டு நிலையில் அறிவது.

மனிதனின் வாழ்க்கைமுறை, பண்பாட்டு எச்சங்கள், பொருள்சார் பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டுமுறை ஆகிய அனைத்து பதிவுகளும் இலக்கியங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மானுடவியல் பலவகையான நிலைகளில் பரந்துவிரிந்த துறையாகத் திகழ்ந்தாலும் அடிப்படையில் நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றில் பண்பாட்டு மானுடவியல் உலகம் முழுவதும் விரிவாக வளர்ந்து பரந்த ஆய்வுத்தளத்தைக் கொண்ட இன்றியமையாத துறையாகும்.

**சமுதாய மானுடவியல் ஆய்வுகள்**

மானுடவியல், மனித இனம் பற்றிய கல்வித்துறை ஆகும். இது மனித குலத்தைச் சமூக-பண்பாட்டு நிலையிலும், உயிரியல் நிலையிலும், கடந்த கால மக்களையும், சமகால மக்களையும் ஆராயும் பரந்துவிரிந்த இலக்குடையதாக உள்ளது. பண்பாடு பற்றிய எண்ணக்கருவும், மனித இயல்பு பண்பாடே என்னும் கருத்தும் அதாவது மனித இனம் உலகத்தைக் குறியீட்டுமுறையில் விளங்கிக்கொள்வதற்கும், சமுதாய ரீதியில் குறியீட்டு முறியில் பயிற்றுவிக்கவும், அக்குறியீடுகளின் அடிப்படையில் உலகத்தையும் மனிதனையும் மாற்றிக்கொள்வதற்கும் ஏதுவாக முழுமையான தகுதியை வளர்த்துக்கொண்டுள்ளது என்னும் கருத்துமே மானுடவியலின் அடிப்படையாகும். அந்தவகையில் நோக்கும்போது முல்லைத்திணை சிறப்புமிக்கதாக அமைகிறது. எனவே அத்திணையில் மானுடவியல் பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முல்லைநில மக்கள்**

முல்லைப்பகுதி மேய்ச்சல் நிலங்களைக் கொண்டிருந்தமையால்ஆடுமாடு வளர்த்தலை முக்கிய தொழிலாகக் கொண்ட மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். இவர்களைக் கோவலர். ஆயர், அண்டர், இடையர் என்னும் பெயர்களால் அழைப்பர். இவர்கல் வாழ்ந்த இடங்கள் சிறுசிறு ஊர்களாக இருந்தன. முல்லைநிலத்து ஊர்களைக்

*...... கோவலர்*

*பெருந்தண் நிலைய பாக்கமும் உடைத்தே"[1]*

என்று ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

**முல்லைநிலத் தலைவனின் பெயர்கள்**

குறும்பொறை, நாடன் என்று தலைவனை அழைப்பர்.

**முல்லைநிலத் தலைவியின் பெயர்கள்**

தோன்றல், மனைவி, கிழத்தி என்பர்.

**முல்லைநில ஊர்கள்**

இல், மாடம், பாக்கம், புறவினம், சிறுகுடி, சீறூர், வைப்பினாடு என்று அழைப்பர்.

**காடுகள்**

புனம், புலம், காடு, கானம், குறும்பொறை, கொல்லை, செந்நிலம், செஞ்சுவல், புறவு, மென்புலம், முரம்பு, வன்புலம் போன்ற பெயர்களை முல்லைநில மக்கள் பயன்படுத்தினர்.

**முல்லைநில வழித்தடங்கள்**

காடும் காடுசார்ந்த இடங்களிலும் காடுகொன்று திருத்திய வழியிடங்கள் அமைந்திருந்தன. பெருவழி, நீளிடை, செந்நிலமருங்கு, தெரு என்று அழைத்தனர்.

**தோற்றமும் நடையுடை பாவனையும்**

ஆயர்களின் தோற்றம் நடையுடை பாவனைகளையும் புலவர் வாக்குகளால் சிறப்பித்துள்ளனர். முல்லைநில ஆண்கள் எப்போதும் காலில் செருப்பு அணிந்திருப்பர். இச்செருப்பின் தழும்பு அவர்களின் பாதங்களில் பதிந்துகிடக்கும். ஆநிரைகளை ஓட்டுவதற்குரிய தடியைக் கையினால் ஊன்றிக்கொண்டிருப்பர். ஆடுகள் உண்பதற்கு இலைகளைப் பறிப்பதற்கு எங்குசென்றாலும் கோலுடன் செல்வர். ஆடுமாடுகளை ஓட்டுங்காலத்தில் சீழ்க்கையொலி அடித்ததால் இவர்கள் வாய் மடிந்து காணப்பட்டது. அதனால் இவரை ''மடிவாய்க் கோவலர்'' என்றும், ''மடிவாய் இடையன்'' என்றும் அழைப்பர்.

**ஆடை அணிகலன்கள்**

இவர்கள் அணிந்துள்ள ஆடை ஒற்றை ஆடையே, இந்த ஆடையும் அழுக்கடைந்து காணப்படும். கரிய உடம்புடைய இவர் செந்நிறம் ஊட்டப்பெற்ற துவர் ஆடையை அணிந்திருப்பர் என்று,

''காயாம் பூக்கண்ணிக் கடுந்துவர் ஆடையை''[2]

என்று கலித்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது.

**முல்லைநில பூக்கள்**

காடுகளிலுள்ள மரங்களிலும் கொடிகளிலும் பூக்கும் பலவகையான பூக்களைச் சூட்டுவர். கதம்ப மலர்களைப் பலவகையாக அணிவர். குருத்த மலர், கோடல் மலர்(காந்தள்) மலர்களையும் தழைகளையும் பல்வேறு வண்ணங்களாகக் கொண்ட மலர்களையும் சூடுவரென்று,

**"மைந்துமலி களிற்றின் தலைப்புணை தழீஇ**

**நரந்தம் நாறும் குவை குருங் கூந்தல்"[3]**

என்னும் அகநானூற்றுபாடல் மலர்களைப்பற்றி குறிப்பிடுகிறது.

முல்லை மலர்க்குடும்பத்தில் கொடிப்பூவகையைச் சேர்ந்தது. முல்லை மலர் வெண்மைநிறங் கொண்டது. இம்மலர் அரும்பின் இதழ்கள் ஒன்றின்மேல் ஒன்றாய்ப்

பொருந்தியுள்ளமையால் நன்கு முறுக்கிவைத்தது போலத் தோன்றும். முல்லை அரும்பின் முனை கூர்மையாக இருக்கும். இதனைப் ''புரிநெகிழ் முல்லை'' எனவும் ''முல்லை வைநுனை'' எனவும் அழைப்பர். முல்லை மலர் சிறிய வடிவகையைக் கொண்டுள்ளது. இது நல்ல நறுமணம் வீசுமென்பதைச்,

***"சிறுவீ முல்லை பெரிதுகமழ் அலரி"***

என்று நற்றிணைப்பாடல் குறிப்பிடுகிறது.

மலர்களில் முல்லை மலர் தனித்தன்மை வாய்ந்தது. தூய்மை, வெண்மை நிறம், வடிவு, மணம், மென்மை, கூர்மை போன்ற நல்லியல்புகளைக் கொண்டது. முல்லையில் செம்மைநிற மலரும் உண்டு. இம்மலரைத் ''தளவம்'' என்று அழைப்பர். முல்லைமலர் அரும்பும்காலம் கார்காலம் ஆகும்.இவற்றைக் காரும் மாலையும் முல்லைக்குறியது என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதனை,

***"கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்***
***பல்லா புகுதரூஉம் புல்லென் மாலை***
***முல்லை வாழியோ முல்லை நீநின்***
***சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை"***

என முல்லை மலரைப்பற்றிய குறுந்தொகைப்பாடல் குறிப்பிடுகிறது.

**இசைக்கருவி**

செந்தீயினால் துளையிடப்பட்ட கரிய துளைகளோடு கூடிய புல்லாங்குழலினை ஊதுவர். இந்த ஊதுகருவியைக் ''குழல்'' என்று,

***"குழல்வாய் வைத்தனர் கோவலர்"***

என அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது. அவர் சிறுகுழலை வைத்திருப்பர் என்று,

***"கல்லாக் கோவலர் ஊதும்***
***வல்வாய்ச் சிறுகுழல் வருந்தாக் காலே"***

என அகநானூற்றுப்பாடல் மூலம் முல்லைநில மக்கள் இசைக்கருவிகளை வைத்திருந்தனர் என்று அறியமுடிகிறது.

**முல்லைநில மக்களின் தொழில்கள்**

முல்லைநிலத்தில் வாழும் மக்கள் ''ஆயர்'' எனப்படுவர். 'ஆ' என்பது பசு, 'ஆயம்' என்பது பசுத்திரள். அதைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் ஆயர் எனப்பட்டனர். 'ஆய்' என்பது குடிப்பெயர் ''ஆர்'' என்னும் பலர் விகுதி பெற்று ஆயர் எனப் பெயர்பெற்றது. ஆயர் வாழ்க்கை முழுவதும் ஆநிரையைப் பேணிப் பாதுகாக்குப் பயன்பெறுதலை அடிப்படையாகக் கொண்டனர்.

**ஆயர் ஆநிரையை ஓட்டிச்செல்லல்**

ஆயர் வீடுதோறும் உள்ள ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச்செல்வர். அவ்வாறு செல்லும்போது தமக்குரிய உணவினை எடுச்சுச்செல்வர். உணவு கெட்டுப்போகாமல் இருக்க ''புளிச்சோறு'' போன்ற உணவினை எடுத்துச்செல்வர் என்று,

***"வருவழி வல்பலர்ப் பேணி கோவலர்***
***மழுவிடைக் கூட்டிய குழாஅய்த் தீம்புளி"***

என அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.

**ஆய்ச்சியர் மோர்விற்றல்**

*ஆயர் மகளிர் விடியற்காலையில் எழுந்து மத்தைக் கொண்டு மோரினைக் கடைவர். மோரைத் தலையின்மேல் மெல்லிய சுமாட்டினை வைத்து மோர்ப்பானையைத் தலையின்மேல் சுமந்து ஊரூராக மோர் விற்கச் செல்வர் என்பதை,*

***"பேரூருஞ் சிற்றூருங் கெளவை யெடுப்பவள்போல்***

***மோரோடு வந்தாள்"[9]***

*என்று கலித்தொகைப் பாடல் ஆயர் மகலீர் மோர்விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.*

***ஆயர் காட்டில் பால்கறந்து வந்து கொடுத்தல்***

*ஆயர் ஆநிரையை மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்லும்போது மிகத்தொலைவில் சென்றால் மாலையில் வீட்டிற்கு ஓட்டிச் செல்ல மாட்டார்கள். அங்கேயே பாலைக்கறந்து வீட்டிற்கு எடுத்துச்செல்வர். வீச்சில் கொடுத்துவிட்டு வரும்போது பால்சோற்றை எடுத்துவருவர் என்பதை,*

***"பறியுடைக் கையர் மறியினத் தொழியப்***

***பாலொடு வந்து கூழொடு பெயரும்***

***யாடுடை யிடைமகன்"[10]***

*என்பர் உறையூர் முதுகொற்றன். இதற்குப் பாலை விற்கும் பொருட்டு மாலைக்காலட்தில் வந்த இடையர் ஊரில் அதனை விற்றுவிட்டு அதற்கு விலையாக உணவுக்குரிய தானியத்தைப் பெற்றுச்செல்வர் எனவும் பொருள்கொள்ள இயலும். இடையர் பால்விற்றலை,*

***"பால்நொடை இடையன்"[11]***

*என்பர் இடைக்காடனார். இவ்வாறாக பால்கறந்த செய்தியை நற்றிணைப்பாடல் விளக்குகிறது.*

*ஆயர் ஆநிரையை ஓட்டிவருதல்*

*ஆயர் மாலையில் ஆநிரையஇ ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வருதல் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆயர் மாலையில் குழலினை இசைத்துக்கொண்டு, பசுக்களை ஓட்டிவருவர். மடிகோலிய உடையினராக வளைந்த கோலைக் கையில் கொண்டிருப்பர். பசுக்கல் கயிற்றில் பிணிக்கபட்ட இளங்கன்றுகளிடத்துக் கனைத்துக்கொண்டே மனைதோறும் செல்லும். ஆயர் மாலையில் சிறிய குழலை ஊதிக்கொண்டு வருதலை,*

***"புன்கன் மாலையொடு பொருந்திக் கொடுங்கோல்***

***கல்லாக் கோவலர் ஊதும்***

***வல்வாய்ச் சிறுகுழல்"[12]***

*என்பர் மதுரைக் கணியன் பூதத்தனார்.*

*கூதிர்காலப் பகற்பொழுதில் மழை பெய்வது இயல்பு. அம்மழையில் நனைந்து வருந்திய ஆயர் நீர்சொட்டும் மாலையினை அணிந்தவராய் மாலைப்பொழுதில் ஊரிடத்து மீண்டு வருவர். ஆயர் மகளிர் பொழுதுபோக்கு.ஆயர் மகளிர் பகலில் தோளி, கழங்கு போன்ற விளையாட்டுகளை ஆடிப் பொழுதுபோக்குவர். ஆயர்மகளிர் தோளி என்னும் விளையாட்டினை ஆடுதலை,*

***"..............................................***

***வையோர் வாலெயிற் றொண்ணுதல் மகளிர்***

***கைமாண் தோளி கடுப்ப, பையென"[13]***

*என்பர். மகளிர் தோளை வீசி ஆடுதலின் இது தோளி எனப்பட்டது. ஆயர் மகளிர் கழங்கினை விரும்பி ஆடுவர். இதனை,*

***"வணங்கிறை மகளிர் அயர்ந்தனர் ஆடும்***

***கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறு"[14]***

என மகளிர் ஆடும் விளையாட்டைப்பற்றி அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.

**முல்லைநில மக்களின் வாழ்க்கைமுறை**

**வைகறை வாழ்க்கை**

ஆயர் வைகறையில் எழுந்து கட்டுத்தறியினை சுத்தம் செய்து ஆநிரையை வேறு இடத்திற் கட்டிப் பால் கறந்திருப்பர். இத்தகைய நிகழ்வுகள் புலவர்களால் பாடப்பெறவில்லை. ஆய்ச்சியர் வைகறையில் தயிர்கடைதல் மட்டுமே சிறப்பாகப் பாடப்பெற்றுள்ளது.

**காலை வாழ்க்கை**

காலையில் ஆயர் ஆநிரையை மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்வதும், ஆய்ச்சியர் மோர், நெய் முதலியவற்றை விற்றுவரச் செல்வதும் நடைமுறையாக உள்ளது. ஆயர் ஆநிரையைக் காட்டிலிருந்து வீட்டிற்கு ஓட்டிவருதல், சிலசமயங்களில் காட்டிலேயே பால் கறந்து வந்து கொடுத்தல் ஆகியன மாலைப்பொழுது நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகளாகும்.

**பகல் வாழ்க்கை**

ஆயர், ஆய்ச்சியர் ஆகிய இருபாலரும் ஆநிரையை ஓட்டிச்சென்று மேய்ப்பதும் ஆய்ச்சியர் தோளி, கழங்கு போன்ற விளையாட்டுகளை ஆடிப் பொழுதுபோக்குவதும் பகற்பொழுது நடைமுறை வாழ்க்கையாகும்.

**ஆயர்மகளிர் உணவு சமைத்தல்**

பண்ணைக்கீரையின் வெண்ணிறப் பழட்தில் உள்ள அரிசி போன்று வரகரிசி இருக்கும். அதை சுனைநீரை ஊற்றிக் கற்களை அடுக்கி அமைத்து அடுப்பில் உலை வைத்து சோறினை ஆக்குவர் என்று,

***"பண்ணை வெண்பழித்து அரிசி ஏய்ப்ப***
***கழல்மரம் சொலித்த சுளகுஅலை வெண்காழ்***
***தொடிமாண் உலக்கை ஊழின் போக்கி***
***உரல்முகம் காட்டிய சுரைநிறை கொள்ளை***
***ஆங்கண் இருஞ்சுனை நீரொடு முகவா***
***களிபடு குழிசிக் கல்லடுப்பு ஏற்றி"[15]***

என உணவு சமைத்ததைப் பற்றி அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.முற்றிய தயிரை உலை நீராக் வைத்து அதில் வரகரிசியைப் போட்டு அதில் மழைக்காலத்தில் பறக்கும் ஈசலையும் அதில் இட்டு புளிப்பு வாய்ந்த விருப்பம் தரும் சோற்றினை ஆக்குவர். இதனை,

***"களவும் புளித்தன் விளவும் பழுநின்;***
***சிறுதலை; துருவின் பழுப்பு உறு விளைதயிர்***
***இதைப்புன வரகின் அவைப்புமான் அரிசியோடு***
***கார்வாய்ந்து ஒழிந்த ஈவாய்ப் புற்றத்து***
***ஈயல் பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு"[16]***

என வரகுசோறு சமைத்ததைப்பற்றி அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை அதன் தன்மையில் சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது. இயற்கையும், முல்லைநில மக்களின் வாழ்க்கைமுறையும் ஒன்றியுள்ளன.

*மரங்கள் செடிகொடிகள் போன்றவையும் விலங்குகளான யானை, மான், பன்றி, முயல், ஆகியவையும் பறவைகளான கருடன், காட்டுக்கோழி, என்பவையும் இருக்கின்றதை உணரமுடிகிறது. முல்லை நிலமக்கள் தொழில்களான வரகு விதைத்தல், களையெடுத்தல் போன்றவை இடம்பெற்றுள்ளன. பொழுதுபோக்குகளாகக் குழலூதுதல், ஏறுதழுவுதல் ஆகியவையும் இடம்பெற்றிருந்தன என்பதே ஆய்வில் கண்ட முடிவாகும்.*

***சான்றெண் விளக்கம்***

1. *புலியூர்க்கேசிகன்(உ.ஆ), ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.489*
2. *ச.வே.சுப்ரமணியம்(உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை(கலித்தொகை) மூலமும் உரையும்,பா.10*
3. *இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு மூலமும் உரையும், ப.795*
4. *வெ.பாலசுப்பிரமணியம்(உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும், பா. 361*
5. *முனைவர் வி.நாகராசன்(உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும் ப.362*
6. *இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு மூலமும் உரையும்,ப.1038*
7. *மேலது., ப.222*
8. *இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு மூலமும் உரையும்,ப.921*
9. *அ.விசுவநாதன்(உ.ஆ), கலித்தொகை மூலமும் உரையும், ப.511*
10. *முனைவர் வி.நாகராசன்(உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும் ப.511*
11. *ச.வே.சுப்ரமணியம்(உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை(நற்றிணை) மூலமும் உரையும், ப.149*
12. *ச.வே.சுப்ரமணியம்(உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை(அகநானூறு) மூலமும் உரையும்.,ப.102*
13. *ச.வே.சுப்ரமணியம்(உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை(அகநானூறு) மூலமும் உரையும்.,ப.404*
14. *ச.வே.சுப்ரமணியம்(உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை(அகநானூறு) மூலமும் உரையும்.,ப.392*
15. *இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு மூலமும் உரையும்,ப.1134*
16. *மேலது., ப.1137*

***துணை நூற்பட்டியல்***


1. *சுப்ரமணியம் ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108.*
2. *செயபால் இரா.- அகநானூறு மூலமும் உரையும், பாவை பிரின்டர்ஸ், 142, ஜானி ஜான் கான் ரோடு, ராயபேட்டை, சென்னை-14.*
3. *நாகராசன் .வி – குறுந்தொகை மூலமும் உரையும், 142, ஜானிஜான்கான் ரோடு, ராயபேட்டை, சென்னை-14, முதற்பதிப்பு 2004.*
4. *பாலசுப்ரமனியம் கு.வெ., நற்றிணை மூலமும் உரையும், 142, ஜானிஜான்கான் ரோடு, ராயபேட்டை, சென்னை-14, முதற்பதிப்பு 2004.*

5. *புலியூர்க்கேசிகன், ஐங்குறுநூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14 முதற்பதிப்பு 2010 ஐந்தாம் பதிப்பு 2019.*